**நாவுல பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 10 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன 28 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாவுல பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் நிர்மாணிக்கப்பட்டிருந்த மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த ரூபா 1,096,226 பெறுமதியான 02 கட்டிடங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கிவல்லை.

(ஆ) ரூபா 3,925,697 ஆன கிடைக்க வேண்டிய நிர்மாண மானிய மீதி குறைவாகவும், ஆண்டிற்குரிய நிர்மாண மானியம் ரூபா 9,766,679 தொகை மற்றும் நிர்மாண செலவினம் என்பன ரூபா 4,708,732 கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,782,135 மற்றும் மேலும் 2 வருமானக் கணக்கு மீதிகளுக்குரிய பெறவேண்டிய வருமானம் 3,382,444 குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய சம்பள மீள் நிரப்பல் ரூபா 18,056,522 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 18,374,033 எனக் காண்பிக்கப்பட்டமையால் சம்பள மீள்நிரப்பல் ரூபா 317,511 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) காணி மற்றும் கட்டிட மீதியில் பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா 86,500 பெறுமதியான சனசமூக மண்டமொன்றையும், ரூபா 100,000 பெறுமதியான கிராம சபை அலுவலக கட்டிடமொன்றையும் ரூபா 60,000 பெறுமதியான எலஹர வீதியின் சில கடைகளையும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டதால் காணி மற்றும் கட்டிட மீதி ரூபா 246,500 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 2,688,183 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,170,714 எனக் காண்பிக்கப்பட்டமையால் நூலகப் புத்தகங்கள் ரூபா 1,517,469 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 2,057,283 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 164,206 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கிடைக்க வேண்டிய கணக்குகள்

கிடைக்க வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,737,026 ஆக இருந்ததுடன் 05 வருட காலத்திற்கு மேற்பட்ட ரூபா 179,218 கூட்டுத்தொகையான 03 மீதிகள் அதில் உள்ளடங்கியிருந்தன.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் கணக்கின் மீதிகள் ரூபா 12,696,102 ஆக இருந்ததுடன் ஓராண்டிற்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 9,013,711 தொகையான மீதியும் அதில் உள்ளடங்கியிருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

03 கணக்கு விடயங்களுக்குரிய போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 3,296,815 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமானதாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்படுகின்ற அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்வற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் 218 ஆம் விதி | சபையின் காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு ஆண்டிற்கு ஒருமுறை மெய்மையாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், 1987 இன் பின்னர் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய எஸ்பீ/ஆர்டீ/02/10 ஆம் இலக்க ஜனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் 3.5 ஆம் பிரிவு | பிரதேச சபைக்குச் சொந்தமான காணி முறையான அனுமதியொன்று இல்லாமல் வெளித்தரப்பினருக்கு பயன்பெறுவதற்கு இடமளிக்கப்படக் கூடாதென அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான கணுமுலயாய காணியில் பிரதேச சபையின் முன்னால் தலைவர் தமது வீட்டை நிர்மாணித்திருந்ததுடன், ஏனைய தரப்பினரும் அக்காணியில் வியாபாரங்களை நடாத்தி வந்தனர். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,465,634 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 449,746 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,015,888 ஆன அதிகரிப்பொன்றைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிலும் முன்னைய 2 ஆண்டு காலப்பகுதிலும் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றல் தொடர்பான சில முக்கியமான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மொத்த வருமானம் மற்றும் செலவினத்திற்கிடையே விகிதம் தொடர்ச்சியாக அதிகரிப்பொன்றைக் காண்பித்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 27,194,218 தொகையான மொத்த மீண்டெழும் செலவினத்தில் ரூபா 21,462,093 தொகை அதாவது 79 சதவீதம் தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 ஆதனவரி

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஆதனவரி மற்றும் மிகைக் கட்டணங்கள் மீதி முறையே ரூபா 1,773,543 மற்றும் ரூபா 585,983 ஆக இருந்ததுடன், நிலுவை ஆதனவரி மீதியில் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 1,468,279 ஆன மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த காலஎல்லையில் ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அரச ஆதனங்களிலிருந்து ரூபா 150,228 ஆன நிலுவை ஆதனவரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.2 கடை வாடகை

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த கடை வாடகை மீதி ரூபா 339,355 ஆக இருந்தது.

(ஆ) 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் கடை வாடகை அறவிடப்படாமல், 2013 மே 30 ஆந் திகதி பொதுக் கூட்டத் தீர்மானத்தின் அடிப்படையில் கடை வாடகை அறவிடப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையின் செல்லுபடிக் காலம் 05 ஆண்டுகளை கடந்திருந்த போதிலும், புதிய உடன்படிக்கைளும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 ஏக்கர் வரி**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஏக்கர் வரி மீதி ரூபா 23,684 ஆக இருந்ததுடன், அந்த மீதிகள் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக மாற்றமின்றி முன் கொண்டு வரப்பட்டுக் காணப்பட்டன.

**2.3.4 நீர்க் கட்டணம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 236,707 ஆக இருந்ததுடன், 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக மாற்றமின்றி முன் கொண்டு வரப்பட்டுக் காணப்பட்ட நிலுவை கழிவுப் பொருள் கட்டண மீதி ரூபா 19,613 ஆக இருந்தது.

**2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 988,307 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 2,353,700 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

**2.3.6 விளம்பர அறிவித்தல் கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் vii(ஊ) மற்றும் XXX உப உறுப்புரையின் 39 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் விளம்பர பதாகை கட்டணம் அறவிடப்படாமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 540,330 அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தரொருவரின் இடர் கடன் மீதியான ரூபா 199,920 தொகையை அறவிடுதற்கு எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 252-6567 ஆம் இலக்க கெப் வண்டி 1999 சனவரி 23 ஆந் திகதி விபத்திற்குள்ளாகியிருந்ததுடன், அதனைப் பழுதுபார்ப்பதற்காக செலவிடப்பட்ட தொகையில் ரூபா 152,200 தொகை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து மீள்நிரப்பப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பேரில் நிர்மாணிக்கப்படும் கட்டிடங்களுக்காக இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிலும் முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் கிடைக்கப்பெற்ற 104 கட்டிட விண்ணப்படிவங்களில் 91 விண்ணப்பங்களுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தன. அதில் 43 விண்ணப்பங்களுக்கு மாத்திரம் இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த காணி சட்டரீதியான உரித்துறுதி மூலம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சபைக்குச் சொந்தமான 19 மயான பூமிகளும் ரூபா 157,572 பெறுமதியான கட்டிடங்களின் உரித்தினை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டில் கிராம எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 980,000 தொகை செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த 05 நீர்ச் செயற்திட்டங்கள் செயற்பாட்டு நிலைமையில் இருக்கவில்லை.

**3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

பிரதேச சபையின் மக்கள் பிரதிநிதிகளின் பதவிக்காலம் 2015 மே 15 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், மே மாதத்திற்குரிய உறுப்பினர் எரிபொருள் மற்றும் தொலைபேசிப் படிகள் என்பன முழுமையாக செலுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 13,500 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

---

சபையின் உழவு இயந்திரத்தையும் ஊழியர்களையும் பயன்படுத்தி சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற 02 தொன் அளவான கழிவுப் பொருட்களை சேருதண்டாபொல காணிக்கு எடுத்துச் சென்று கழிவுகளை குழிகளில் இட்டு மண்ணால் மூடும் முறைமையொன்று பின்பற்றப்பட்டிருந்ததுடன், அந்தக் காணியில் கழிவு முகாமைத்துவத்திற்காக 2006 ஆம் ஆண்டின்போது நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 750,000 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட கழிவுப் பொருள் பிரிவு அதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

**விளைவற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாத பெறுமதி குறிப்பிடப்படாத சபையின் உழவு இயந்திரத்தையும் ரூபா 200,000 பெறுமதியான டேலரையும் ரூபா 130,000 பெறுமதியான கலிபௌசரையும் கைதவிர்ப்பதற்கோ அல்லது திருத்தியமைத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கெப் வண்டியொன்றிலிருந்து 04 வருடங்களுக்கு முன்னர் கலற்றி அகற்றிய என்ஜினொன்று தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த 142,102 தொகையான 44 நீர்மானிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் இருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) 03 வருமான விடயங்களுக்காக ரூபா 20,323,716 தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதில் எவ்வித வருமானத்தையும் உழைக்க சபை தவறியிருந்ததுடன், 09 வருமான விடயங்களில் 35 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையான வீச்சில் இலக்கிடப்பட்ட வருமானத்தை உழைப்பதற்கு தவறியிருந்தது.

(ஆ) 16 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 837,000 தொகையான நிதி ஏற்பாடுகளில் எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், 12 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 45 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(இ) மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் நிதிஏற்பாட்டு எல்லைகளை விஞ்சி 13 செலவின விடயங்களில் ரூபா 1,330,836 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதற்காக முறையான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே நிதி ஏற்பாடு மாற்றப்பட்டதன் பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்விற்கு எழுத்துமூல கடமை கையளிக்கப்படாமல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தருக்கு வேறு கடமைகளும் கையளிக்கப்பட்ட காரணத்தால் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) வாகன நிருவாகம்
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு